விலை சதம் 10.

# சுதந்திரன்

SUTANTIRAN

வ- ஆ. 2001, வைகாசி 10 உ ஞாயிறு (24-5-70) ற. அவ்வல் பிறை 17 —புத்தகம் 24 இதழ் 45

## யூ.என்.பி. வெற்றி பெற்ருல் மன்ஞர் சிங்கள மயமாகும்!

### அதைத் தடுக்க அழகக்கோன் வெல்லட்டும்!

### தளபதி அமிர்தலிங்கம் முழக்கம்!

(மன்ஞர் நிருபர்)

தமிழர்களுக்கு மன்ஞரில் ஏற்பட்டுள்ள பெரிய ஆபத்தை உணர்ந்து தேர்தலில் போட்டியிடாது விட்டேனேயொழிய தமிழரசாருடன் எவ்வித பணமோ' ஒப்பந்தமோ நான் பெறவில்லை, எனது அரசியல்



எதிரிகள் மேடைகளில் நான் தமிழரசாரிடம் பத்தாயிரம் ருபா பெற்றதாக பொய்ப்பிரசாரம் செய்கிருர்கள் இது முற்றிலும் பொய்,

இவ்வாறு முருங்கன் பஸ் நிலையத்தில் திரு. அழகக்கோனை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திரு. யோன்மாக் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இலங்கையின் இருபெரும் சிங்கள அரசியல் கட்சிகள் மன்ஞருக்கு வந்துள்ளது. இது மன்ஞருக்கு அழிவைத் தான் தேடித்தரும். கட்டாயம் சிங்களக்குடியேற்றமும் நடைபெறும்!

(3-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் பொலிஸ் வீரர் தாக்கப்பட்டார்

## கூட்டணிக் கட்சியாளர் வெறியாட்டம்!

### வெசாக் தினத்தில் தமிழ்த் துவேஷம்!

(கொழும்பு நிருபர்)

இடதுசாரிக் கூட்டணிக் கட்சியினர் தான் தமிழர்களை கெளரவமாகவும், சுதந்திரத்தோடும் நடத்தக் கூடியவர்கள் என்று வட மகாணத்தில் அக் கட்சித் தலைவர்கள் வாய் கிழியக் கத்தும்போது அதே கூட்டணிக் கட்சி முன்னணித் தலைவரொருவரின் தம்பியார் புனிதமான வெசாக் தினத்தில் தமிழ்த் துவேஷ வார்த்தைகளைப் பாவித்து கடமையிலீடுபட்டிருந்த ஒரு தமிழ் பொலிஸ் வீரரைத் தாக்கிய பரபரப்பான சம்பவம் 21ம் திகதி வெசாக் இரவில் கொழும்பில் நடந்திருக்கிறது.

இச் சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:

தொழிலாளர்க்கும், சிறுபான்மையாளேர்க்குமாகப் பாடுபடுவதாக கூறிக் கொள்ளும் கூட்டணிக் கட்சிகளிலொன்றின் முக்கிய தலைவர்களிலொருவரான திரு. அணில் முனசிங்காவின் சகோதரர் திரு. நிமல் முனசிங்கா. இவர் எளியோர்

[4-ம் பக்கம் பார்க்க)



தமிழ் பேசும் மக்களைச் சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்துவரும் ஒரே கட்சி தமிழரசுக்கட்சியென்பதை தவறிப் போய் தமிழர்களாகப் பிறந்த சிலர் ஒப்புக் கொள்ள மறுத்து கிண்டல் பேசிஞலும் சிங்கள ஏடுகள் இந்த உண்மையை உணர்ந்திருக்கின்றன. இதை மேலேயுள்ள 'லங்காதீப' பத்திரிகையில் வெளிவந்த கார்ட்டூன் சித்தரித்துக் காட்டுகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி பயிலும் தமிழ் பிள்ளைகளிடம் சிங்களத்தை திணிக்க இரியகொல்லை முயற்சிக்கிருர். இதற்கு இடமளிக்காது தமிழ் பாடசாலைகளை தமிழரசுக் கட்சியென்ற பாம்பு காவல் காத்தபடி இரியகொல்லையை நோக்கிச்சீறுகிறது. இதுவே கார்ட்டூன் கூறும் கருப்பொருள். தமிழினத்தை காத்து நிற்பது தமிழரசுக் கட்சியென்பது இதிலிருந்து தெரிகிறதல்லவா?

## சந்தனப் பொட்டும் தேவார இசையும்

(கீரிமலை நிருபர்)

தெய்வ நம்பிக்கையற்ற, தெய்வ வந்தனையை நிந்தனை செய்கின்ற, நாஸ்தீக கொள்கையைக் கொண்ட கம்யூனிஸ்ட்டுகளின்கூட்டங்களில் தேவாரம் இசைக்கப் படுகிறதாம். அத்தோடு தன் அரசியல் வரலாற்றிலேயே சந்தணப் பொட்டு அணியாத வ; பொன்னம்பலமும் அவரது சகாக்களும் சந்தணப் பொட்டு அணிந்து கொண்டு மேடைகளில் தோன்றுகிருர்கள். மக்களை ஏமாற்றும் கம்யூனிஸ தந்திரங்களில் இதுவும் ஒன்று என்று மக்கள் பேசிக் கொள்கிருர்கள்.

# தவருமல் தொகுதிகளுக்கு வந்து கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிப்பீர்!

## வடக்கு கிழக்குக்கு வெளியேயுள்ள மக்களுக்கு தமிழரசுத்தந்தை விடுக்கும் வேண்டுகோள்!



''வெளியூர்களிலுள்ள வாக்காளர்களும் 27ம் திகதி தவருமல் வந்து தத்தமது தொகுதிக் கட்சி வேட்பாளர்களுக்குத் தங்கள் தங்கள் வாக்கைப் போடும் படி கேட்டுக்கொள்கின்றேன்''—

இவ்வாறு பெரியவர் செல்வா அவர்கள் அரசாங்க உத்தியோகத்தரல்லாதவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவரது வேண்டுகோளின் முழு விபரமும் பின்வருமாறு:—

வட, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே உத்தியோகம் பார்க்கின்ற அரசாங்க உத்தியோகத்தரல்லாத எல்லா வாக்காளர்களும் எதிர்வரும் வைகாசி 27ம் திகதி தத்தமது தொகுதிக்கு வந்து கட்சி வேட்பாளர்களுக்குத் தங்கள் தங்கள் வாக்கைப் போடும்படி தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

வாக்காளர்கள் தமது சொந்தச் செலவிலேயே வந்துபோகவேண்டும். ஏனெனில் அந்தச் செலவுகளை வேட்பாளர் கொடுப்பது தேர்தல் சட்டப்படி மிகப் பாரதூரமான குற்றமாகும். அத்தோடு எமது கட்சி வேட்பாளர்கள் அந்தச் செலவைத் தாங்கும் வசதி படைத்தவர்களல்லர்.

எனவே எல்லோரும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமது வாக்குகளைப் பிரயோகிக்கவேண்டும். உங்கள் ஒவ்வொருவரின் பொன்ஞன வாக்குகளும் தமிழ் பேசும் இனத்தின் புதிய மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும் என்ற உண்மையை மறவாமல் உங்கள் குடியுரிமையைப் பிரயோகிப்பீர்களென்று நம்புகின்றேன்!

இவ்வாறு தந்தை அறிவித்துள்ளார்.

# தேவநாயகம் கட்டப்போகும் தொழிற்சாலை செந்தமிழர் தோலில் செருப்புதொழிற்சாலையா

## கல்குடா கூட்டத்தில் 'முகிலழகன்' கேள்விக்கணை!

''தேவநாயகம் கல்குடா தொகுதியில் தொழிற்சாலைகள்கட்டித்தருவார்—எனவே அவரையே தெரிவு செய்து அனுப்புங்கள் என்று சிலர் கூறுகிருர்கள்; என்ன தொழிற்சாலை ஐயா அது? கே. எம். பி. ராஜரத்திஞதான் அந்தத் தொழிற்சாலைக்கு அதிபராக இருப்பாரா? தமிழனுடைய தோலில் செருப்புத் தயாரிக்கும் தொழிற்சாலையா அது?''

இவ்வாறு கல்குடா தமிழரசு தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையில் கிழக்கிலங்கை தமிழரசுக்கட்சி ஆரம்பகால அமைப்பாளர்களில் ஒருவரும் தமிழரசுப் பிரமுகர்களில் ஒருவருமான ''முகிலழகன்'' கந்தசாமி அவர்கள் ஆவேசத்தோடு கேட்டார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

''அந்தக் காலத்தில் ஊரில் உள்ள பிள்ளைகளை யாருக்கும் தெரியாமல் பிடித்துச் சென்று காட்டுப் புறத்தே உள்ள காளிக்குப் பலி கொடுக்கும் மந்திரவாதிகளைப் பற்றிய பேச்சு நம் ஊரில் அடிக்கடி அடிபடுவதுண்டு: தாய்மார்கள் பிள்ளைகளை தெருவுக்கு விடவே அஞ்சுவார்கள். அந்த மந்திரவாதிகள் பிள்ளைகளை நெருங்கி ,,மிட்டாய் வாங்கித் தருவேன்—வாழைப்பழம் வாங்கித் தருவேன்'' என்றெல்லாம் ஆசைகாட்டி அழைத்துச் சென்று இறுதியில் அந்தப் பச்சைக் குழந்தைகளின் கழுத்துகளை வெட்டிப் பலி கொடுப்பார்களாம்; தேவநாயகம் தம்பிராசா போன்றவர்களும் இப்படியான மந்திரவாதிகளே! தமிழினத்தை யூ. என். பி. சிங்கள வெறியர்களுக்கு பலி கொடுப்பதற்காக பாலம் போட்டுத் தருவேன் பள்ளிக்கூடம் கட்டித் தருவேன்'' என்று

(3-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில்

## பொலீஸ் சர்வாதிகாரம்!

### மார்டின் படம் பறிமுதல்!

யாழ்ப்பாணத்தில் தமிழரசு ஆதரவாளர்கள் மீது பொலிஸ் கெடுபிடி அதிகரித்து வருகிறது. பிரபல ஓவியரும் தமிழரசு ஆதரவாளருமான திரு. ச. பெனடிக்ற் மீது பொலீசார் அண்மையில் அநீதியான முறையில் பாய்ந்துள்ளனர். இத்தனைக்கும் திரு. பெனடிக்ற் செய்தகுற்றம், திரு சி. எக்ஸ். மார்ட்டின் அவர்களின் படமொன்றை ஒரு அட்டையில் ஒட்டி அதன் கீழ் ''மார்ட்டின் வெற்றி'' என்று எழுதி தமது சித்திர நிலையத்தின் உள்ளே வைத்திருந்ததுதான்.

திரு. பெனடிக்ற் பிணையில் விடுதலை செய்யப்பட்ட பின்னர், நமது நிருபரிடம் இது பற்றி கூறுகையில், சாவகச்சேரி காரத்தால் மார்ட்டின் வெற்றியைமறைத்துவிட முடியாதென்றும் தெரிவித்தார்.

பீலிக்ஸ் பேச்சின் எதிரொலி:

## 15 பேர் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேற்றம்

(குரும்பசிட்டி நிருபர்)

தமிழ் மொழிச்சட்ட விதிகள் சிங்கள இனத்துக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகமென்றும் தமிழ் மொழிச்சட்ட விதிகளின்படி சிங்கள அரசாங்க ஊழியர்கள் தமிழ் படிக்க வேண்டுமென்றும் அண்மையில் இடதுசாரிக் கூட்டணியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன வெறி பிடித்து அலறியிருந்தாரல்லவா? இதன் எதிரொலியாக குரும்பசிட்டியைச் சேர்ந்த 15 தமிழ் இளைஞர்கள் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறிவிட்டனர். இவர்கள் அனைவரும் திரு. வீ. பொன்னம்பலத்தைதீவிரமாகஆதரித்துவந்தவர்கள்இப்பொழுது தமிழரசு தந்தையின் வெற்றிக்கு உழைத்துவருகிருர்கள்!

# தமிழரசுக் கோட்டை வட்டுக்கோட்டை காங்கிரசிற்கு விட்டுக் கொடுக்குமா?

வட்டுக்கோட்டை இம்முறை தமிழரசுக் கட்சிக்கு விட்டுக்கொடுக்கமாட்டாது; தளபதி அமிர்தலிங்கம் இம்முறை தோற்கடிக்கப்படுவார்; காங்கிரசிற்கு அமோக ஆதரவு; என்றெல்லாம் எங்கும், எதிலும் வட்டுக்கோட்டை பற்றிய பேச்சாகவே இருக்கின்றது. யாழ். நீதிமன்ற வழக்கறிஞர்கள் தொட்டு சாதாரண மக்கள் வரை வட்டுக்கோட்டை பற்றியே பேசிக் கொள்ளுகின்ருர்கள்.

தமிழரசின் மூலபலமாக—தளபதியாக விளங்கும் திரு. அமிர்தலிங்கம் போட்டியிடும் இத்தொகுதி பற்றி மூந்திய தேர்தல்களிலும் இப்படித்தான் கதை காவித்திரியும் கயவர்கள் கூப்பாடு போட்டார்கள். முடிவ பத்தாயிரத்துக்கு மேலான அதிகப்படி வாக்குகளை எட்டிப்பிடித்து எட்டப்பர் கூட்டத்தை ஓட ஓட விரட்டியது. தளபதியின் தோல்வி பற்றி பஸ்களிலும், நீதிமன்ற வாசிகசாலையிலும், மற்றுமிடங்களிலும் கதை பரப்ப ஒரு கூட்டமே இயங்குவதாகத் தெரிகின்றது. வட்டுக்கோட்டைத் தொகுதியை விட வெளியிடங்களில்தான் இந்தப் பொய்ப்பிரசாரம் பிரகாசமாகச் சுடர்விடுகின்றது. திட்ட மிட்ட சதி இந்தப் பிரசாரம் என்பதை நான் நேரில் சென்று அறிந்தேன். பஸ்களில் அமிர்தலிங்கத்தைப் பற்றி கன்ன பின்ன என்று பேச ஒரு கூட்டமே செயல்பட்டுவருகின்றது.

காரைநகர் வாசிக்கே இம்முறை வாக்கு என்று ஊர் பிரித்துப் பேசுகிருர்கள். அப்படியானல் அடுத்த ஊரவர்கள் என்ன ஏமாளிகளா? அடுத்த அயல் ஊர்களில் இருக்கும் காங்கிரஸ் அனுதாபிகளே உங்கள் உள்ளத்தைத் தொட்டுக் கேளுங்கள். இந்தப் பித்தர்கள் பிரசாரத்திற்கு நீங்களும் பலியாக வேண்டுமா? காரைநகர் இம்முறை தியாகராசாவுக்கே என்று வீணை வங்குரோத்துப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிருர்கள். வடமாகாணத்தில் மாத்திரம் போட்டியிட்டு குறுகிய மாகாண வாதம் புரியும் தமிழ் காங்கிரஸ்காரர், இப்போ தேர்தல் தொகுதிகளில் கிராமவாதத்தையும் கிளறிவிட்டிருக்கின்ருர்கள். கொள்கைக்காக வாக்குக் கேட்பது வேறு. மாற்றுக் கட்சிக்காரரின் ஏமாற்றுக்களைப் புட்டுக்காட்டி வாக்குக் கேட்பது வேறு. ஆனல் குறுகிய கிராமவாதம் புரிவது 20ம் நூற்ருண்டில் இந்த உலகில் வேறெங்கும் காண முடியாத முடக்கு வாதமாகும்; முட்டாள்கள் வாதமாகும்.

காரை நகரான் கேட்பதால் இம்முறை காங்கிரஸ்காரன் வெற்றி நிச்சயம் என்று பொய்ப் பிரசாரம் செய்வோரே! கடந்த தேர்தலில் போட்டியிட்ட தம்பிப்பிள்ளை யார்? அவர் காரைநகர் வாசியல்லவா? அவருக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 4000ம் தானே அதை பின்னரும் இப்படியான அடிமுட்டாள்தனமான பிரசாரத்தை ஏன் விழுந்தடித்துச் செய்கின்றீர்கள்?

காரை நகரில் இருக்கும் 8000க்கு மேற்பட்ட வாக்குகளும் காங்கிரசிற் கென்று கூறித்திரிவதில் ஜனநாயகம் எங்கிருக்கின்றது? மக்கள் நீங்கள் கருதுவதுபோல் அவ்வளவு முட்டாள்களல்லர்.

தனித்தமிழ் நாடு கேட்டுப் பிரசாரம் செய்த தியாகராசா ஒற்றை ஆட்சித் தலைவரின் கீழ் ஒன்றுபட்டது பதவி ஆசையைக் காட்டுகின்றதா? மக்கள் சேவையைக் காட்டுகின்றதா? வாக்காளர் சிலர் தமிழரசுத்தளபதிமேல் சுமத்தும் சில சில்லறைக் குற்றச்சாட்டுகளையும் நான் கேட்டேன். அக்குற்றச்சாட்டுக்களைக் கேட்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை, வெளிமாகாண இடமாற்றம் பெற்ற ஒரு பெண் ஆசிரியை தனது இடமாற்றத்தை நிற்பாட்ட அமிர்தலிங்கத்தால் முடியவில்லை. அப்படியான அமிர்தலிங்கத்தை நான் ஆதரிப்பேன என்ருர். அடுத்த வீட்டுக்காரருடன் தான் சண்டை பிடித்த போது பொலிசில் அமிர்தலிங்கம் உதவிசெய்ததால் இம்முறை என் வாக்கு காங்கிரசிற்கே என்ருர் இன்னெருவர். படித்து இதுவரை எனக்கெது வித வேலையும் கிடைக்கவில்லை எனவே இம்முறை காங்கிரசை அனுப்புவோமென்ருர் ஒரு பட்டதாரி. தன் மகனுக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுக்க இன்னெருதடவை வருமாறு கூறிய அமிர்தலிங்கத்துக்கு எங்கள் வாக்கு இம் முறை இல்லை என்ருர் இன்னெரு பொற்கொல்லர்.

இவர்கள் பூர்வோத்திரத்தை விசாரித்ததில் இவர்கள் எல்லோரும் காங்கிரஸ் காரர்தான் என்பது தெரிந்தது. இதனல் இவர்கள் பிரசாரம் உப்புச்சப்பற்றதாகி விட்டது. சில்லறைப் பிரச்சினைகளுக்காக ஒரு இனவிடுதலைக்காகசிறை சென்ற, அடிபட்ட, தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட வீரனை ஆதரிக்காமல் விடுபவர்கள் தம்



சொந்த லாபத்திற்காக விபசாரம் செய்யவும் தயங்க மாட்டார்களல்லவா?

காங்கிரசினல் இதுவரை இப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டனவா? இதுவரை எந்தப் பிரச்சினையிலும் வெற்றி காணுத காங்கிரசார், வேலை எடுத்துத் தருவோம் வோட்டுப் போடுங்கள் என்று கேட்பது வேடிக்கையில்லையா? கூரையில் ஏறிச் சுரைக்காய்பறிக்க மாட்டாதவரா வானத்திலேறி வைகுண்டம் காட்டப் பார்க்கிருர். 20 வருட அரசியல் அனுபவம் பெற்று நான்கு தடவைகள் எம். பி. யாக இருந்து வந்த ஒருவரால் சில பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லையானல் நேற்று வந்த தியாகராசாவால் எப்படித் தீர்க்க முடியும்?

காரைநகர் வாதம் பேசும் காரைநகர் பிரமுகர்களே, வம்மின்! நும்மைச் சிலகேள்விகள் கேட்கிருேம். பதிலை நீங்கள் உங்கள் நெஞ்சத்திடமே கேட்டுப்பாருங்கள்.

தியாகராசா காரைநகர் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்காக இதுவரை உருப்படியாக ஏதேனும் செய்திருக்கின்ருரா? ஊரவன் என்கிறீர்களே! இதுவரை காரைநகரை அவர் எவ்விதத்தில் அபிவிருத்தி செய்தார்? அவர் தள்ளி விழுத்திய காரியங்கள் யாவை?

தமிழினத்தின் போராட்டங்களில் அவர் பங்கு என்ன? மறைந்திருந்தாயினும் சத்தியாக்கிரகப் பக்கம் பார்த்தாரா? ஸ்ரீ எதிர்ப்பில் சிறை சென்ருரா?

கல்லூரியில் அவர் செய்த அட்டகாசங்களின் பட்டியல் தெரியுமா? ஆசிரியரிடம் ஒற்றுமை காணப்பட்டதா? நிர்வாகம் சுமுகமாகச் சென்றதா? அடிபட்ட ஆசிரியர் நீதிமன்றம்வரை செல்லவில்லையா? பின் பலரது தலையீட்டால் சரிக்கட்டப்படவில்லையா? தியாகராசாவிடம் அடி வாங்கிய பியூன் கோட்டுக் குச்செல்லவில்லையா? பின் கூலியாகப் பணம் கொடுத்து சடைத்து விடவில்லையா?

மக்கள் சேவைக்காகவா வேலையை விட்டார்? அதாவது இளைப்பாறினர். இதைவிட அண்டப்புளுகு உலகில் வேறெங்கிலும் உண்டா? கொழும்புக்கு மாற்றம் வந்தது தெரியாதா? ஒடி ஆடித்திரிந்தும் உருப்படியாக ஒன்றும் செய்ய முடியாது என்ன செய்வதென்று ஏங்கியிருக்கும்போது வந்த தேர்தல் அவரைத் தியாகி தியாகராசா வாக்கிவிட்டதா? மக்களுக்காகப் பதவி துறந்தாரென்பது சுத்த கம்பக் அல்லவா?

‘‘கல்வி மந்திரியாக வரும் தகுதியுள்ள ஒரே தமிழர் தியாகராசா ஒருவர் தான்’’ என்று பொன்னர் திருவாய் மலர்ந்தருளினரே அது உண்மைதானு? தியாகராசாவை விடப் பட்டம் பெற்ருேர், சிறந்த அறிஞர் தமிழர் மத்தியில் மருந்துக்கும் கிடைக்காதா? மக்கள் கும்பகர்ணப்படலத்திலா இருக்கிருர்கள்? தமிழன் அறிவை இத்தனைதூரம் தாழ்த்திப் பேசிய பொன்னர் தமிழர் தலைநகரில் போட்டியிட்டு வெற்றியும் பெறப் போகிருர்? பலே! பலே! தமிழறிஞர் வரிசை தெரியாத த[illegible]குப் பிள்ளை நிலையில் அல்லவா பொன்னர் இருக்கிருர்

தமிழரசுத் தந்தையை எதிர்க்கும் முன்னுள் மந்திரி—தமிழரில் கணித மேதை—அறிஞர் திரு. ஸி. சுந்தரலிங்கம் சில வருடங்களுக்கு முன் மானிப்பாயில் பேசும் போது என்ன சொன்னர் தெரியுமா?

‘சேர் பொன். இராமநாதன், சேர் பொன். அருணசலத்தின் பின் தமிழருக்குக் கிடைத்ததலைவர் திரு.அமிர்தலிங்கம்’ இப்படி மாற்ருரும் மதிக்கும மதி நுட்பத் தலைவர் தியாகத் தளபதி, தமிழர்க்கு இன்னல் என்ருல் துடித்தெழும் தமிழ் மானம் மிக்கவர் வட்டுக்கோட்டையில் தோற்பதாவது.

வட்டுக்கோட்டை தமிழரசுக் கோட்டை அது காங்கிரசிற்கு விட்டுக்கொடுக்காதென்பது மே 27ல் வாக்காளர் நிரூபிப்பார்கள் என்பதை காங்கிரஸ் கைக்கூலிகள் தெரிந்து கொள்ள இன்னும் அதிக நாட்கள் இல்லை. காங்கிரஸ் வெட்டிப் பேச்சுக்கு வாக்காளர் வோட்டு மூலம் வேட்டு வைப்பதைத் தமிழ் பேசும் மக்கள் காணத்தான் போகிருர்கள். தேன் என்று பக்கம் பக்கமாக எழுதினுல் தேன் நாவில் இனித்துவிடுமா? ஒரு துளி நாவில் விட்டாலல்லவா அது இனிக்கும். உண்மை தெரியாமல் உளறிக்கொட்டாமல் காங்கிரசார் ஒதுங்கியிருக்கட்டும்.

‘‘அப்பலோ’’

# முன்னுள் அரைச்சபாநாயகரே துணிவிருந்தால்பதில்சொல்லும்

## தாமரைக் குளம் செல்லையா விடுக்கும் 9 கேள்விகள்!

(1) 60ம் ஆண்டு முதல் 65ம் ஆண்டு வரை தமிழினத்தை முக்கிய பிரச்சினைகள் எதிர் நோக்கியிருந்ததால் தமிழரசுக் கட்சியுடன் ஒத்துழைத்ததாகக் கூறினீரே. அப்படியாயின் தமிழினத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க ஆவன செய்யும் கட்சி தமிழரசுக் கட்சியே என்பதை ஏற்கின்றீர்களா?

(2) 60ம் ஆண்டு முதல் 65ம் ஆண்டு வரை சிங்கள உள்ளூராட்சி அமைச்சர் இருந்த காரணத்தால் அத்துளுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் இருந்திருக்கின்றது 65ம் ஆண்டுக்குப்பின் தமிழரசு அமைச்சாரின் கீழ் இது நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே தமிழமைச்சரின் உதவி இல்லாமல் அத்துளுத் திட்டம் நிறைவேறறப்பட்டிருக்க முடியாது. என்ற கருத்தை ஏற்கின்றீர்களா?

(3) சிலாபம் ஆஸ்பத்திரியின் அதே தரத்தில் மந்திகை ஆஸ்பத்திரி இருப்பினும் சிலாபம் ஆஸ்பத்திரியிலுள்ள வசதிகளை மந்திகை ஆஸ்பத்திரியிலும் ஏற்படுத்த ஏதாவது முயற்சிகள் எடுத்தீர்களா?

(4) உடுப்பிட்டித் தொகுதிப் பாடசாலைகளின் கல்வித் தரம் 60ம் ஆண்டின் பின் குறைந்துவிட்டது. அதற்கான காரணத்தை விளக்குவீரா?

(5) உடுப்பிட்டித் தொகுதியில் நிறுவப்பட்ட உபதபாற் கந்தோர்களின் பெயரையும், தொலைபேசி வசதி அளிக்கப்பட்ட தபாற்கந்தோர்களின் பெயர்களையும் தருவீர்களா?

(6) மகாவலிகங்கை யாழ்ப்பாணத்துக்கு வந்தே தீரும் என்று கூறும் நீங்கள் அதை கௌரவிக்க வெளியிட்ட இலங்கைப் படத்தில் மகாவலிகங்கை யாழ் நகர் நோக்கி வராததன் மர்மம் என்ன?

(7) சென்ற தேர்தலுக்கு முன்பு 600 பட்டதாரிகளுக்கு வேலை தேடித்தருவேன் என்று கூறினீர்களே, அவர்களுக்கு வேலை தேடித்தர ஏதாவது ஆவன செய்தீர்களா?

(8) துன்னலை, புருப்பொறுக்கி ஆகிய இடங்களுக்கு மின்சாரம் உங்களுடைய முயற்சியாலேயே வந்தது என்பதை நிருபிக்க உங்களிடம் ஏதாவது ஆதாரங்கள் உள்ளதா? இருப்பின் அவற்றைத் தொகுதி மக்களுக்கு வெயிடுவீர்களா?

(9) மண்டான், அல்வாய் ஏனைய இடங்களுக்கு மின்சார வசதி அளிப்பதற்கு அமைச்சரிடம் ரூபா 2,00000 கேட்டிருப்பதாகக் கூறுகின்றீர்களே அவர் தருவாரா? சென்ற ஐந்து வருடங்களாக இத்தேவைக்கு உம்மால் பெற முடிந்தது ரூபா 45,000 பாராளுமன்றம் கலைக்கப்பெற்றபின் அப் பெருந்தொகையை அமைச்சர் தருவாரா? எப்போ?

மேற்படி கேள்விகளை தாமரைக்குளம் நா. செல்லையா திரு. சிவசிதம்பரத்திடம் விடுத்திருக்கிருர். திரு. செல்லையா அவர்கள் ஈழநாடு பத்திரிகை மூலம் விடுத்த மேற்படி கேள்விகளுகு திரு. சிவசிதம்பரம் பதில கொடுக்காதபடியால் அவற்றை சுதந்திரனுக்கு அனுப்பியுள்ளார்.

தமிழ் மொழிச்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர் கண்காணித்து வருகிருர்.

12. ஆட்சிமொழித் திணைக்களத்திலே இரு கண்காணிப்பாளர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

13. இதன் தொடர்ப[illegible] தமிழ் எழுதுவினைஞர்களும் நியமிக்கப்பட்டு தமிழிலே கருமம் ஆற்றி வருகிருர்கள்.

14. இதுகால வரையும் ஒதுக்கப்பட்டு வந்த இந்திய இலண்டன் பட்டதாரிகள் பலர் 500 ரூபாவுக்கும் மேற்பட்ட சம்பளத்தை இன்று மொழிபெயர்ப்பாளர் பதவியில் பெற்றுவருகிருர்கள்.

15. தமிழ்ச் சொற்ருெகுதியை வெளியிடுதற்கு தமி[illegible] ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட குழுவிற்கு பல ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

16. தமிழ்மொழிபெயர்ப்பு என்ற போர்வையில் சிங்களச் சொற் திணிப்பை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

முடிவாக, தமிழரசி[illegible] சாதனையால் ஒருபுறம் இத்தனை உத்தியோகத்தர்களினதும் குடும்பங்களும் மன நிறைவோடு வாழ்க்கை நடாத்துகின்றன. மறுபுறம் தமிழ் மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதால் ஈழத் தமிழுலகமே பூரிப்படைந்துள்ளதற்கு துரோகிகளின் சாதனையா? அல்லது—தமிழரசின் சாதனையா?

# தமிழ் நாட்டுக்காக, தமிழ் மொழிக்காக தம்மையே அர்ப்பணித்தவர்கள் தமிழரசார்!

## தமிழ்துரோகிகளை வாக்குச்சீட்டால்விரட்டி தமிழின விடுதலைக்கு அடிகோலுவோம்!

### வீட்டுக்கு வாக்கு; வீணர்களுக்கு வேட்டு!

### தமிழ் பேசும் மக்களுக்கு தமிழணிச்சபை வேண்டுகோள்!

திருக்கோணமலையைச் சிங்களப் பிரதேசம் என்று வீரம் பேசும் சிங்கள அரசியல் கட்சிகளான யூ. என். பி. ஸ்ரீ ல. சு. க. போன்றவை சிங்களவர் ஒருவரைத் தங்க வேட்பாளராகத் திருக்கோணமலையில் நிறுத்த எவ்வித துணிவுமில்லாது, தமிழர் ஒருவரை அல்லது



தமிழ் பேசும் இனத்தைச் சேர்ந்த ஒருவரையே தங்கள் வேட்பாளர்களாக நிறுத்தி, அன்று முதல் இன்று வரை திருமலையைத் தமிழர் கைகளில் இருந்து பறிக்க மறைமுகமான திட்டமொன்றை வகுத்த வண்ணமேயுள்ளன.

ஆனால் திருமலை வாழ் தமிழ் மக்களின் அசைக்க முடியாத ஒற்றுமையால் இதுநாள் வரை அவர்களின் சதி நிறைந்த திட்டம் மட்டமான வண்ணமே வந்தன.

யூ. என். பி. ஸ்ரீ ல. சு. க. ஆகிய சிங்களக் கட்சிகளின் இந்தக் கபட நாடகத்தை திருமலை வாழ், தமிழ் பேசும் மக்கள் அறியாதவர்கள் அல்லர். அரசியல் அறிவு மிக்க தெளிவாக அவர்களிடம் என்றுமே காணப்படுகிறது. இதன் காரணத்தாலேயே இன்று வரை திருமலையின் ஆட்சிப் பொறுப்பைதமிழரசிடம் ஒப்படைத்தார்கள். இனிமேலும் முன்போலவே ஒன்றுதிரண்டு பாராளுமன்றம் அனுப்பி வைப்பார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை தமிழுலகத்திற்கு இருக்கிறது.

எது எப்படி இருப்பினும் நெறியோடு வாழும் நம் தமிழினத்தின் சித்தமதைத் கலகக. பதவிமோகம் பிடித்த ஓர் சில அரசியல் சந்தர்ப்பவாதிகளின் கூட்டம் நம் மத்தியில் என்றுமே இருந்து வருகின்றது. இப்படித் தமிழினத்தின் மத்தியில் உலாவும் அரசியல் சந்தர்ப்பவாதிகள் குறித்துத் திருமலை வாழ் தமிழ் பேசும் மக்கள் மட்டுமலல, தமிழ்த் தொகுதிகளின் அத்தனை தமிழ்ப் பேசும் வாக்காளரும் மிக்க விழிப்புடன் ஒன்று பட்டுச் செயலாற்ற வேண்டும்.

சுதந்திரம் பெற்ற நாள் முதல் இன்று வரை ஈழத் தமிழினம் கடந்து வந்த பாதையை நாம் எப்படித் தான் மறக்க இயலும். தமிழுக்காக. நம் தமிழ் நாட்டுக்காக நாம் பட்ட அடிகளும் உதைகளும் கணக்கில் அடங்குமா என்ன? எத்தனை தமிழ் உயிர்களை இழந்தோம்? தலைவர்களை இழந்தோம். இவையாவற்றையும் இழந்தோமே! எதற்காக?

எம் மொழிக்காக-நம் தமிழ் நாட்டுக்காக—நம் மொழி, நம் நாடு, இந்த இரண்டும் வாழ்த்தாலன்றித் தமிழர்களாகிய எமக்கு வாழ்வில்லை என்பதை எம்மால் மறக்கவோ, மறுக்கவோ அல்லது மறைத்து வாழவோ இயலாது. எதிர் வரும் பொதுத் தேர்தல் இருக்கிறதே, இது தமிழர்களாகிய எமக்கு ஓர் சோதனை நிறைந்ததாக, நெருக்கடி மிக்கதாக, பல வாழ்க்கைப் பிரச்சினைகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது.

இப்பொதுத் தேர்தலில் எப்படியென்றாலும், எப்பாடு பட்டாலும் பொய்ப்பிரச்சாரங்கள் செய்து, ஆசைவார்த்தைகள் காட்டித் தமிழ் மக்களை விடுதலைப் பாதையிலிருந்து பிரித்துவிடச் சிங்களக் கட்சிகளும், அவற்றின் தமிழ் பகுதிக் கைக்கூலிகளும், எடுபிடிகளும் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

எனவே தமிழ் பேசும் மக்கள் மிக்க நிதானமாகத் தமது வாழ்க்கைப் பிரச்சினைகளை ஊன்றிச்சிந்தனைசெய்து செயலாற்ற வேண்டிய ஓர் சிக்கலான நேரம் இது என்பதை நன்குணர வேண்டும்.

இந்த நிலையில், இன்றைய சூழ்நிலையில் தமிழர்களாகிய நாம் எடுக்கும் முடிவு ஓர் முற்றான முடிவாக, நம் வாழ்வின் பயணத்திற்குப் படியாக அமையவேண்டும். அந்த நல்ல முடிவும், தமிழுக்கு விடிவும் காணவேண்டுமேயானால் தமிழர்களாகிய நாம் ஒரு தலைமையின் கீழ், ஒரு தமிழ் கொடியின் கீழ் இட்டுச் செல்லப்படவேண்டும் என்பது தவிர்க்கமுடியாத தொன்றாகிவிட்டது. இந்த நல்ல முடிவு எடுப்பதற்கான பொறுப்பு தமிழ் மகனின் தலையில்தான் சுமத்தப்பட்டுள்ளது.

இதைச் செயல்படுத்த முற்படும்போது, தமிழ் மொழிக்காக, தமிழ் நாட்டுக்காக அடி உதை வாங்கியது யார்? என்பதை நன்றியுணர்ச்சியுடன் நினைவுபடுத்த நல்ல தமிழ் மகன் மறக்கமாட்டான். பட்ட இன்னல்கள், அடி, உதை இவை யாவும் நினைவுக்கு வரும்போது, புனிதமான அந்தத் தமிழன் வாக்கும் யாருக்கு அளிக்கப்படவேண்டும் என்பது புரியாதவர்க்கும் புரிந்துவிடும்.

தமிழ் மக்களிடையே பல வித கருத்து வேறுபாடுகள், கட்சி வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் நாடாளுமன்ற அரசியலில் அவற்றைச் சாதிக்க முற்படுவோமேயானால், அந்தச் சுயநல எண்ணத்தால், தனிப்பட்ட நம் கருத்து வேற்றுமைகளால் தமிழினம்தான் பாதிக்கப்படும்.

சிங்களக் கட்சிகள் தமக்கிடையே அதிகாரத்திற்காகப் போட்டியிடுகின்றனவே தவிர நம் தமிழினத்தை வேரோடு அழித்தொழிக்கும் செயலில் அவை ஒன்றுபட்டு, ஒற்றுமையுடனேயே இயங்குகின்றன. இதைத் தமிழர்களாகிய நாம் எச்சந்தர்ப்பத்திலும் மறப்பதற்கில்லை.

ஆனால், தமிழர்களாகிய எமது நிலையோ விந்தை நிறைந்த ஓர் வேறு கதை. தமிழினத்தின் சுதந்திரத் தாகத்தை அடக்கி ஒடுக்கி, சுதந்திர வேட்கையை நசுக்கித் தமது அற்ப சுயநல திருப்திக்காக தமிழ்பேசும் மக்களைச் சிங்களவர்களுக்கு விலைபேசி விற்கும். விற்கத் துடிக்கும் எட்டப்பர்களும் இனத்தையே காட்டிக்கொடுக்கும் துரோகிகளும், தாங்களும் தமிழர்கள், தமிழ் பேசும் மக்கள் என்ற நாமத்துடன் சிங்களக் கட்சிகளின் சார்பில் தமிழ்பிரதேசங்



**சிவ. நவசோதி**
செயலாளர்:
**இலங்கை தமிழணிச்சபை**

களில் போட்டியிடுகின்றார்கள்.

இலங்கையில் தமிழர்கள் பல ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கின்றார் என வரலாறு கூறுகிறது. ஏன்! சிங்கள மக்கள் இங்கு குடியேறிய காலத்திலும் கூடத் தமிழ் மக்கள் வாழ்ந்ததாக ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின்றார்கள்.

திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம், முன்னேஸ்வரம்—கதிர்காமம் ஆகிய தமிழர்களின் ஆலயங்கள் கூடப் பன்னெடுங்காலமாக சீர்பெற்றுச் சிறப்புடன் திகழ்ந்திருக்கின்றன. இவற்றை நாம் நோக்கும் போது தமிழர் இந்த நாட்டில் சிங்களவர்களைவிட பல உரிமையுடன் வாழவேண்டியவர்கள் என்பதை யாரால் மறுக்கமுடியும்,

ஆனால் இன்றோ தமிழர்களாகிய எமது நிலை என்ன? அடிமைகளாக' அனாதைகளாக வாழ்கின்றோம்.

இந்த நிலையை நன்குணர்ந்து, தமிழ்பேசும் மக்கள் யாவரும் ஒன்று திரண்டு மாற்றானின் பாலருந்த மட்டிகள் அல்ல நாம் என்பதை உணர்த்தி, மாற்றானின் கைகளிலே பகடைக்காயாகப் பதவிஎன்னும் மோகத்தால், தான் தமிழன் என்பதைக் கூட மறந்து தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்க முற்பட்டிருக்கும் தன்மானமற்ற தமிழ் வேட்பாளர்களை வாக்கு என்னும் கசையால் அடித்து விரட்டித் தமிழுக்காக, தமிழ்பேசும மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்த தமிழரசுக் கட்சியின் வீரத்தியாகிகளை பாராளுமன்றம் அனுப்பி எம்மையும் எம்மொழியையும் மாற்றானின் அரக்கப் பிடியிலிருந்து காப்பாற்ற வேண்டியது தலையாய கடமையாகும்.

செந்தமிழ் நாடாம் திருமலையையும் எமதாக்கத் தன்மானமுள்ள தமிழ் பேசும் மகனின் வாக்கு திரு. நேமிநாதன் அவர்களுக்கே என்பதை அவன் எப்போதோ முடிவு செய்துவிட்டான்.

ஆனால் எந்த முடிவுமே செய்யாத அந்தத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு எம் சிரம் தாழ்த்திய வேண்டுகோள்.

நமது ஒற்றுமையை நாடறியச்செய்யுங்கள். தூய்மையான தமிழ்கட்சி தமிழரசுக் கட்சி. அந்தக் கட்சியின் வேட்பாளர்களைப் பாராளுமன்றம் அனுப்பி வைத்து தமிழைக் காப்பாற்றும் பெருமை தமிழ்பேசும் மக்களாகிய தங்களைச் சாரட்டும். தமிழும் வாழட்டும். தமிழனும் ஆளட்டும்.

தமிழரசுப்படைவீரர் வரிசை-(15)

## தமிழ்ச்சிங்கம் ஜெயக்கொடி



எண்ணற்ற இன்னல்களை ஏற்றுத் துயருறும் தமிழ் அன்னையின் அல்லல்அகற்றி அரியாசனம் ஏற்றும் அரும்பணிக்குத் தம்மையே 'அர்ப்பணித்த தலைவர்களுள் உடுப்பிட்டி தந்த க. ஜெயக்கொடியும் முன்னணியிற் திகழ்கின்றார். உயர்ந்த பண்பும், நேர்மையும், திறமையும், பெருமையும் பெற்ற இவர் தமிழர்களின் எதிர்காலம் கருதித் தன்னையே அரசியலுக்கு அர்ப்பணித்தவர்,

சட்டவல்லுனரான திரு. ஜெயக்கொடி சிறிது காலம் சட்ட நிபுணராகப் பணிபுரிந்தார், பின்னர் நீதிபதி பதவியேற்று சிறப்பான சேவை செய்தார். நீதி பரிபாலன சேவையில் தமிழிலேயே வழக்குகளை நடாத்தி வெற்றி கண்ட பெருமை இவரையே சாரும் பின்னர் சில நெருக்கடிகள் காரணமாக நீதிபதி பதவியைத் துறந்தார்.

செயலாற்றும் திறமையும், துடிப்பும், தீமையைக் கண்டு சீறும் தன்மையும் கொண்ட இளைஞர்களைத் தக்கபடி நடாத்தி ஏற்ற பணிகளை அவர்களுக்களித்து வழி நடத்தும் பண்பாளர் அவர்.

சொந்தவிருப்புவெறுப்புகளை வளர்க்கவோ சொகுசான வாழ்வு தேடவோ விரும்புகிறவர்களல்ல தமிழரசுத் தலைவர்கள் என்பதற்கு க. ஜெயக்கொடியே சிறந்த உதாரணமாகத் திகழ்கிறார்.

திரு. ஜெயக்கொடியைப் போன்ற தன்னலம் கருதாத தலைவர்கள்தான் தமிழரசு இயக்கத்தை தமது தியாக இரத்தத்தால், பாடுபட்ட வியர்வையால், நேர்மை மிக்க குறிக்கோள்களால் உருவாக்கினார்கள். அவர்கள் எத்தகைய தியாகத்தையும் செய்யச் சித்தமாயுள்ளார். காரணம் தமிழும், தமிழனும் பூரண உரிமைகள் எல்லாம் பெற்று சிறப்போடு வாழவேண்டும் என்பதனாலேயே;

'எவ்விதத்தியாகமானாலும் சரிதொட்ட பணியினை விட்டு விடேன்' என்று இம்முறையும் போட்டியிடுகிறார் திரு. ஜெயக்கொடி; அவரின் எதிர்காலத் திட்டங்களையும், சேவை புரியக் கூடிய உள்ளத்தையும் கண்ட உடுப்பிட்டி இளைஞர்கள் இப்போது ஜெயக்கொடியின் வெற்றிக்காகப் பாடுபடுகின்றார்கள். அதனால் தான் எவரும் எதிர்பாராத விதத்தில் உடுப்பிட்டியில் திரு. ஜெயக்கொடிக்கு மாபெரும் வெற்றி காத்துக்கிடக்கிறது.

தேவநாயகம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசைகாட்டி அழைத்துப் போகப் பார்க்கிறார்கள்,

தேவநாயகம் கல்குடா தொகுதிக்கு தொழிற்சாலை கட்டித் தருவாராம்..... அதனால் அவரையே தெரிவு செய்து அனுப்பவேண்டுமாம் இப்படிச் சொல்கிறவர்களிடம்நான் ஒன்றுகேட்பேன்... தேவநாயகம் இங்கே என்ன தொழிற்சாலை கட்டப்போகிறார்? தேவநாயகம் இருக்கும் அதே யூ. என். பி யில் தான் இப்போது, "தமிழனின் தோலில் செருப்புத்தைத்துப் போடுவேன்" என்று சொன்ன சிங்கள வெறியர் இராஜரெத்தினாவும் இருக்கிறார். ஒருவேளை தேவநாயகம் போடப்போகும் தொழிற்சாலை செந்தமிழனின் தோலில் செருப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலையாக இருக்குமோ?"

## யூ. என். பி. வெற்றி பெற்றால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில்; தமிழர்கள் தன்மானத்துடன் மண்ணில் வாழவேண்டுமானால் அழகக்கோனை ஆதரியுங்கள். தமிழ்மக்களுக்காக தமிழரசுக்கட்சி பட்டபாடுகளை நீங்கள் அறிவீர்கள். எத்தனை உயிர்களை பலியிட்டுவிட்டது. நன்றியுள்ள தமிழர்களானால் எங்களை ஆதரியுங்கள்,

அமிர்தலிங்கம் பேசுகையில்; தமிழரசார் அரசாங்கம் அமைக்கமுடியாது என்று டட்லி கிழக்குமாகாணத்தில் கூறினாராம், யூ. என். பியை ஆட்டிப்படைத்தது தமிழரசு என்பதை அவர் மறந்துவிட்டார் போலும் மன்னாரில் யூ. என். பி. வென்றால் அம்பாறை மாவட்டத்திற்கு நேர்ந்த கதிதான் மன்னாருக்கும். அன்று தமிழ்ப்பிரதிநிதியை அனுப்பிய அம்பாறை இன்று சிங்களக்குடியேற்றத்தினால் சிங்களப் பிரதிநிதியை அனுப்புகிறது இந்த சிங்களக்குடியேற்றத்திற்குகாலாயிருந்தவர் தமிழ் மக்கள் அனுப்பிய யூ. என். பி. அபேட்சகரே. எனவே சிந்தித்து வாக்களியுங்கள்.

தலைமை தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

# தமிழ் மொழிச் சட்ட விதிகளுக்கு உயிரூட்டியவர் இரத்தினம்!

## அரசகரும மொழித் திணைக்களத்துடன் அவர் நடத்திய போராட்டங்கள்!

தமிழினம் செத்தொழியட்டும் நமக்குப் பதவி கிடைத்தால் போதும் என்ற சுயநலவாதிகளாம் தமிழ் காங்கிரஸ் துரோகிகளையும், பட்டம் பதவி வேண்டாம்; தமிழ் வாழ வேண்டும் தமிழ்த் தாய்க்குலம் மஞ்சள் குங்குமத்தோடு மானத்தோடு வாழ்ந்தால் போதும் என்று கூறும் தியாகிகளின் பாசறையாம் தமிழரசுத் தொண்டர்களையும் இலங்கைத் தமிழர்களுக்கு எடுத்தியம்புவதுதான் தமிழ் மொழி (விசேடஏற்பாடுகள்) சட்டமாகும்.

வடக்கிலும் கிழக்கிலும் எந்த துரோகச் சக்திகளாலும் தமிழை ஒழித்துவிட முடியாதவாறு சட்டம் இயற்றவைத்தது தமிழரசின் சாதனை.

சட்டம் ஏட்டில் மட்டும் வெறுமனே இருக்கவிடாது அதைச் செயற்படுத்துவதைப் பார்க்கும் பொறுப்பை தமிழரசுக்கட்சி பண்டிதர் இரத்தினத்திடம் ஒப்படைத்தது.

செயற்படுத்துவது சிங்கள இனவெறியர்களால் தாமதப்படுத்தப்படுகிறதென்ற செய்தி எட்டியதுதான் தாமதம் பாராளுமன்றத்தில் அதைச் செயற்படுத்தும்படி—

பொன்னம்பலம் கேட்டாரா...?

சிவசிதம்பரங்கள் கேட்டனரா...?

இல்லை... இல்லை... இல்லை...

தமிழ்த் துரோகிகள் வாய் மூடிநிற்கலாம்; ஆனால் என்னால் பொறுக்க முடியாதெனக் கண்ட பண்டிதர் நாடாளுமன்றத்தில் கேள்விக்கணை தொடுத்தார்.

● ஆட்சிமொழித் திணைக்கள ஆணையாளருக்கு அதுவும் தமிழிலே அவ்வப்போது எழுதிய ஆட்சேபக் கடிதங்களே நூற்றுக்குமேல் இருக்கும்.

● ஆணையாளர் அசட்டையாயிருந்த போது அவரை நேரே கண்டு தமிழ்ப்போர் தொடுத்தார்.

ஆட்சி மொழித் திணைக்களத்திற்குள்ளே தமிழ் மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு பண்டிதர் துணிந்து வந்துவிட்டாரா என்று சிங்கள வெறிபிடித்த உத்தியோகத்தர்கள் திடுக்குற்றூர்கள்;

தமிழரசுத் தந்தையை எதிர்த்துப் போட்டியிடும் பொன்னம்பலத்திற்குப் பக்கப்பாட்டுப் பாடும் ''எத்த'' பத்திரிகை பண்டிதர் வருகைக்கு எதிர்கோஷம் எழுப்பிற்று. ஆட்சிமொழித் திணைக்களமே அதிர்ந்தது.

தமிழ்மொழிச் சட்டத்தைச் செயற்படுத்துகிறேன் என்ற உறுதி மொழியோடு வெற்றிவாகை சூடித் திரும்பினுர் பண்டிதர்.

ஆட்சிமொழித் திணைக்களத்தின் நிறத்தை அறியாத காங்கிரஸ்வாதிகள் பண்டிதரின் சாதனை கண்டு பொருமைப்பட்டனர்.

தமிழ்மொழிச் சட்டத்தை நிறைவேற்றிய தமிழரசின் சாதனையால் தமிழ் மக்கள் பெற்ற நன்மைகள் பின்வருமாறு:-

1. ஒரே ஒரு மொழி பெயர்ப்பாளரை மட்டுமே கொண்டிருந்த ஆட்சிமொழித் திணைக்களத்தில் தமிழ்ப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

2. உதவி ஆணையாளராகத் தமிழர் நியமிக்கப்பட்டார்.

3. ஒன்ருக இருந்தமொழி பெயர்ப்பாளர் பதவி இன்று எட்டாகப் பெருகியது.

4. இரண்டு ஆராய்ச்சி உதவியாளர் நியமிக்கப்பட்டனர்.

5. அரசகருமசொற்களைக் கொண்ட தமிழ் அகராதிகள் அச்சிடப்பட்டுவருகின்றன.

6. வருடந்தோறும் திறைசேரி தமிழ்மொழிபெயர்ப்பாளர் பதவிகளுக்குப் பட்டதாரிகளைச் சேர்த்துவருகிறது.

7. கூட்டுத்தாபனங்களில் தமிழ் மொழிபெயர்பாளருக்கென பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

8. இதனுல் பல தட்டச்சாளர்களும் திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் நியமிக்கப்பட்டனர்;

9. அரசாங்க அச்சகத்தில் தமிழ்ப்பகுதி வேலைக்காகப் பலர் நியமிக்கப்பட்டனர்;

10. படிவங்களைத் தமிழிலே பெற முடிகிறது;

11. அரசாங்க கசெற்றில் தமிழிலும் சகலதும் வெளியிடப்படுவதை ஆட்சிமொழித் திணைக்கள தமிழ் உதவி

(2ம் பக்கம் பார்க்க)

# டெய்லி மிறரின் திருகுதாளம்




இடதுசாரிக் கூட்டணியுடன் தமிழரசுக்கட்சி இரகசியபேச்சுவார்த்தை நடாத்தியதாக 19ம்திகதிவெளியிட்ட தனது பொய்ச் செய்தியை நிரூபிப்பதற்கு சிலோன் டெயிலி மிறர் மே 23 ந் திகதி இதழில் பல திருகுதாளங்களை விட்டிருக்கிறது: தனது பொய்ச் செய்திக்கு ஆதாரமாக சுதந்திரன் வெளியிட்டிருந்த மேற் கண்ட கார்ட்டூனையும் டெயிலி மிறர் மறுபிரசுரம் செய்திருக்கிறது: இதில் டெயிலி மிறர் செய்துள்ள திருகு தாளங்களைப் பாருங்கள்.

(1) சுதந்திரனில் மேற் கண்ட கார்ட்டூன் வெளிவந்தது இடதுசாரிகளுடன் தமிழரசுக்கட்சி பேச்சுவார்த்தை நடத்துவதாக டெயிலி மிறர் வெளியிட்ட கட்டுக்கதைக்கு பல நாட்களுக்கு முன்பு—அதாவது ஏப்ரல் 11ம்திகதி. இக்கார்ட்டூன் வெளிவந்த பின்னர் 33 நாட்கள் கழித்து இடதுசாரிக் கூட்டணியை தமிழரசுக்கட்சி சாடுவதாக கொட்டை எழுத்துக்களில் 14-5-70 ல் செய்தி வெளியிட்டது டெயிலி மிறர் என்பது குறிப்பிடத்தக்கது.

(2) மேற்குறித்த கார்ட்டூனில் பட்டிருப்பில் தமிழரசுத்தலைவருடன் போட்டியிடுவோம் என்ற பிரதமரின் செய்தியும் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த செய்தியுடன் சேர்த்துப் பார்க்கும் போது தமிழரசுத் தலைவருடன் யூ. என். பி.போட்டியிடுவதால் பட்டிருப்பில் யூ. என். பி.யின் சவக்குழி மே 27ல் மூடப்படும் என்பதே இக் கார்ட்டூனின் உட்பொருள். ஆனால் டெயிலி மிறரோ பத்திரிகா தர்மத்தை மீறி குறிப்பிட்டிருந்த அச்செய்தியை நீக்கிவிட்டு வெறும் கார்ட்டூனை மட்டும் பிரசுரித்திருப்பது கவனிக்கத்தக்கது.

டெயிலி மிறர் திரு. பொன்னம்பலத்துக்காக எவ்வளவு பொய்களை எழுதினுலும் எத்தனை திருகுதாளங்கள் விட்டாலும் பொன்னம்பலத்தின் தோல்வி இம்முறை தடுக்கப்பட முடியாதென்று அரசியல் அவதானிகள் நம்பிக்கை தெரிவிக்கிருர்கள்.

# இஸ்ரேலியர்களுக்கு ஆயுதம் வழங்கும் அமெரிக்கர்களை ஆதரிப்பவர் தேவநாயகம்!

## இஸ்லாமியர் தேவநாயகத்தை ஆதரிக்கலாமா?

### கல்முனை உதுமான் கேட்கிறார்!

'மட்டக்களப்பிலுள்ள அமெரிக்கர் இலங்கையர் நட்புறவுக் கழகத்தின் உறுப்பினரும்முக்கியபிரமுகருமாக கல்குடா தேவநாயகம் விளங்குகிருர். அமெரிக்க அடிவருடிகளான யூ. என். பியினரின் வேட்பாளராகவும் தேவநாயகம் கல்குடா தொகுதியில் போட்டியிடுகிருர். அராபிய இஸ்லாமியர்களுக்கு எதிராக இஸ்ரேலுக்கு இரகசியமாக ஆயுதங்களை வழங்கும் அமெரிக்காவுக்கு வால்பிடிக்கும் தேவநாயகத்தை கல்குடா வாழ் இஸ்லாமியர்கள் ஆதரிக்கலாமா? ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள் கல்குடாவில் யூ. என். பி. மண் கவ்வுவதும் தமிழரசுக்கட்சி வெற்றி பெறுவதும் உறுதியானதாகும்.'

இவ்வாறு கல்முனை தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரைநிகழ்த்துகையில் கல்முனை உதுமான் கூறினுர்.

## மாபெரும் கூட்டம்

தமிழரசுத் தளபதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களை ஆதரிந்து இன்று மாலை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள திறந்த வெளி அரங்கில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறுகிறது. தமிழரசு வேட்பாளர்கள் உட்பட பலர் உரையாற்றுகிருர்கள்.

## தமிழ் பொலிஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போக முடியாத மாபெரும் கோல்பேஸ் ஒட்டலின் மனேஜர். இவர் 21ம் திகதி வெசாக் தினத்திலன்று யூனியன் பிளேசிலுள்ள நிர்மலா கிளப்பிற்கருகே தனது காரை சட்டவிரோதமான இடத்தில் நிறுத்த முற்பட்டார் அப்போது அவ்விடத்தில் கடமையாற்றியவர் கொம்பனித்தெரு பொலிசைச் சேர்ந்த 8765 இலக்கமுள்ள இராமநாதன் என்ற போலிஸ் வீரர்.

அவர் நிமல் முனசிங்காவிடம் அவ்விடத்தில் காரை நிறுத்துவது சட்ட விரேதமென்றும் அப்பால் நிறுத்தும்படியும் சொன்னுர்.

அதைக் கேட்காத முனசிங்க அவ்விடத்திலேயே காரை நிறுத்தப் போவதாக வீம்பு பண்ணினுர். கடமையில் கண்ணுன பொலிஸ் வீரரோ தன்னுல் அதை அனுமதிக்க முடியாது என்ருர். திரு. ராமநாதன் தனக்காக சட்டத்தை மாற்றிக்கொள்ளவில்லை என்பதனுல் உடனே ஆத்திரம் கொண்ட நிமல் முனசிங்கா அவரை. பற தெமலோ! 'கெறி தெமலோ' என்று தூஷண மொழியால் சாடிவிட்டு அங்கிருந்து போயிருக்கிருர். அவர் நேரே கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று திரு. ராமநாதனுக்கெதிராக ஓ.ஐ.சி: வில்லியம் பெர்ணுண்டோவிடம் புகார் செய்துவிட்டு மீண்டும் திரும்பிவந்து அதே இடத்தில் காரை நிறுத்த மூயன்றிருக்கிருர்.

ஆனுல் அந்தத் தமிழ் பொலிஸ் வீரரோ தன்னுல் சட்டத்தை மீற முடியாது என்று மீண்டும் முனசிங்காவின் நீதிவிரோதச் செயலைத் தடுக்க முற்படவே முனசிங்க பொலிஸ் ராமநாதனை கடுமையாகத் தாக்கிவிட்டு காருடன் ஓடி மறைந்தார்.

அதன் பிறகு பொலிஸ் வீரர் திரு. ராமநாதன் தன் சகாவுடன் பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு செய்ததன் பேரில் பொலிஸ் சுப்பிரிடன், நிமல் முனசிங்காவைப் பிடித்து 'ரிமான்டில்' வைத்திருக்கின்ருர்.

இதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கும் போது 'சிங்களப் பொலிஸ்காரனுயிருந்தால் அடித்திருக்க மாட்டேன்' என்று நிமல் முனசிங்க இனத்துவேஷமாகக் கூறியதாகவும் தெரிகிறது.

இச் சம்பவத்தைப் பற்றியறிந்த நியாய மனம் படைத்த பொதுமக்கள் அன்பு. அகிம்சையும் பேணும் போயா தினத்தில் இப்படி நடப்பதா எனக் கொதிப்படைந்துள்ளனர்.

சட்டத்தின் காவலனை ஒரு பொலிஸ் வீரரையே இப்படித் தாக்கி இழி சொல்லால் பேசும் இவர்கள் சாதாரண மக்களை என்னவெல்லாம் செய்வார்கள்? என்று அவர்கள் ஆத்திரத்தோடு கேட்கின்ருர்களாம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்.